TNTP010050052023

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி**

முன்னிலை :– திரு. **பெ . சுவாமிநாதன்**, M.L.,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண் – 333/2023</u>**

1. அ. கலீல் அகமது
2. மைனர் சுஹைனா

அவருக்காக அவரது கார்டியனும் போஷகரும்
அவரது தாயார் வழி தாத்தா அ. கலீல் அகமது

...வாதிகள்

/எதிராக/

1. கிளை மேலாளர்,
யூனிட் 1 கிளை, லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா,

2. மண்டல மேலாளர்,
மண்டல அலுவலகம், தஞ்சாவூர்

3. க. அன்சர் அலி ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு கடந்த 17.06.2025 அன்று இறுதியாக இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. அன்பழகன் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சம்பத் அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. I. சந்தியானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், வழக்குரை, எதிர்வழக்குரை சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்

ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதத்தைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

**வாதிகளுக்கு ரூ.15,00,000/-க்கான 12% சதவிகித பின் வட்டியுடன் பிரதிவாதிகள் திருப்பிச் செலுத்தக் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

2) **<u>வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம் :-</u>**

2.1. முதல் வாதியின் மகள் நிஹார் பாத்திமாவிற்கும், மூன்றாம் பிரதிவாதிக்கும் இருவீட்டார் சம்மதத்தின் அடிப்படையில் கடந்த 08.11.2012 அன்று திருச்சி, ரோஷன் மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றது. அந்த திருமணத்தின் பலனாக கடந்த 14.02.2014 ம் தேதி இந்த வழக்கில் கண்ட இரண்டாவது வாதி பிறந்தார்.

2.2. முதல் வாதியின் மகள் நிஹார் பாத்திமாவுடன் மூன்றாம் பிரதிவாதி இணக்கமான முறையில் குடும்பம் நடத்தாமல் பணம் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு திருமணத்தின்போது சீதனமாக கொடுக்கப்பட்ட நகைகள் அனைத்தையும் அடகு வைத்து கணினி மையம் தொடங்கப் போவதாகவும், தொழில் தொடங்குவதாகவும், கூறி ரூபாய் 4 லட்சம் வரை முதல் வாதியிடம் வாங்கி செலவு செய்து அந்தப் பணத்தை இதுவரையிலும் திரும்பத் தராமல் நஷ்டம் ஆகி இருக்கிறது. மூன்றாம் பிரதிவாதி தன் விருப்பப்படி தொழில் தொடங்கி பல நஷ்டங்கள் ஏற்படுத்தி வந்ததாலும், பலமுறை முதல் வாதியின் மகள் மூன்றாம் பிரதிவாதியிடம் சொந்தத் தொழில் செய்யாமல் ஏதேனும் வேலைக்குச் சென்று வருமானம் ஈட்ட அறிவுரை வழங்கியதையும், மூன்றாம் பிரதிவாதி ஏற்க மறுத்து

தொடர்ந்து முதல் வாதியின் மகளிடம் பணம் கேட்டு மன உளைச்சலையும், தொடர் தொந்தரவையும், ஏற்படுத்தி வந்த காரணத்தினால் நிஹார் பாத்திமா அவரது பெற்றோர் வீட்டிற்கு அவரது குழந்தையான இரண்டாம் வாதியை அழைத்துக்கொண்டு வந்துள்ளார்.

2.3. கடந்த 05.11.2016 ம் தேதி திருச்சி கன்டோன்மென்ட் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நிஹார் பாத்திமா ஒரு புகார் கொடுத்தார். அதன்படி, முதல் வாதியால் நிஹார் பாத்திமாவின் திருமணத்திற்கு அணிவிக்கப்பட்ட 75 பவுன் தங்க நகைகளை அடகு வைத்து இருந்ததை மீட்டுக் கொடுக்கக் கேட்டபோது, ஒரு வருடத்தில் திருப்பிக் கொடுப்பதாக மூன்றாம் பிரதிவாதி கூறிய காரணத்தினால் திருச்சி கன்டோன்மென்ட் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சமரசம் செய்து வைத்து அந்த புகார் மனுவின் நடவடிக்கை கைவிடப்பட்டது.

2.4. ஆனால் மூன்றாம் பிரதிவாதி, முதல் வாதியின் மகளுக்கு அவரால் திருமணத்தின் போது அணிவிக்கப்பட்ட நகைகளை அடகு வைத்ததை இதுவரையிலும் மீட்டுத் தரவில்லை.

2.5. முதல் வாதியின் மகளாகிய நிஹார் பாத்திமாவையோ, இரண்டாம் வாதி சுஹைனாவையோ அழைத்துச் செல்லாமல் அதற்கான முயற்சி எதையும் செய்யாமல் மூன்றாம் பிரதிவாதி காலம் கடத்தி வந்துள்ளார்.

2.6. முதல் வாதி, இரண்டாம் வாதியையும், இரண்டாம் வாதியின் தாயாரும் தன் மகளுமாகிய நிஹார் பாத்திமாவையும், தனது வீட்டிலேயே தங்க வைத்து பாதுகாத்து, வேண்டிய உதவி ஒத்தாசைகள் செய்து இரண்டாம் வாதி மைனர்

சுஹைனாவையும் ஒரு பள்ளியில் சேர்த்து மூன்றாம் பிரதிவாதி செய்ய வேண்டிய கடமைகளை முதல் வாதி செய்து கொண்டு வந்துள்ளார்.

2.7. முதல் வாதி திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி பணி நிறைவு பெற்றவர் ஆவார். முதல் வாதி தனது மகளின் எதிர்கால நலனுக்காகவும், இரண்டாம் வாதியும் தன்னுடைய பேத்தியுமான சுஹைனாவின் எதிர்கால நலனையும் கருத்தில் கொண்டு கடந்த 20.03.2020ம் தேதி முதல் பிரதிவாதியிடம் பாலிசி எண் 305487324 பாலிசி அட்டவணை எண் 945-70, SA ன் படி ரூ.15,00,000/- (ரூபாய் 15 லட்சம் மட்டும்) பாலிசி எடுத்துக்கொண்டு வருட தவணை செலுத்துவதாக ஒப்புக்கொண்டு முதல் வாதி தன்னுடைய சேமிப்புக் கணக்கிலிருந்து ரூ.1,17,816/-ஐ முதல் பிரதிவாதியின் அலுவலகத்தில் செலுத்தி இருக்கிறார்.

2.8. அவ்வாறு பாலிசி எடுக்கப்பட்ட காலத்தில் இரண்டாம் வாதி சுஹைனாவிற்கு வயது ஏழு என்பதால், ஆயுள் காப்பீட்டுக்கழக முகவரிடம் வாரிசாக சுஹைனாவை நியமனம் செய்யுமாறு முதல்வாதி வேண்டிக் கேட்டுள்ளார். அதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழக முகவர், இளவரை நாமினியாகப் போட முடியாது என்று கூறி இளவரின் தகப்பனார் பெயரைக் கேட்டு எழுதிக் கொண்டு மைனரை நாமினியாக போட்டால் பல்வேறு சிக்கல் உள்ளது என்று கூறி விட்டார். ஆனால், எப்படியும் மைனருக்குத் தான் பணம் போய் சேரும் என்று கூறிவிட்டு மூன்றாம் பிரதிவாதியின் பெயரை தவறுதலாக நாமினியாக எழுதி அதன் அடிப்படையில் பாலிசி பத்திரம் வழங்கப்பட்டு இருக்கிறது.

2.9. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பாலிசி எடுத்த காலத்திற்கு இரண்டு வருடத்திற்கு மேலாகவே முதல் வாதியின் மகளும், மூன்றாம் பிரதிவாதியும், கணவன் மனைவியாக சேர்ந்து வாழாமல் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில் ஆயுள் காப்பீட்டுக் கழக முகவரிடம் இளவர் சுஹைனாவை நாமினியாக நியமனம் செய்ய சொன்னதற்கு மூன்றாம் பிரதிவாதியை நியமனம் செய்துள்ளார்.

2.10. ஆயுள் காப்பீட்டுக் கழக பாலிசிக்கும், மூன்றாம் பிரதிவாதிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. முதல்வாதி தன்னுடைய இரண்டாவது மகள் ஜஸிமா நிலோபருக்கு கடந்த 21.06.2021 ம் தேதி திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்து மணமகனின் வீட்டார் முதல் வாதியின் சொந்த ஊர் அருகில் இருந்ததால் தனது சொந்த ஊரான விருதுநகர் மாவட்டம், தம்பிப்பட்டி கிராமத்திற்கு திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே திருமண வேலைகள் செய்வதற்காக தனது மனைவி மற்றும் மகள் நிஹார் பாத்திமா, பேத்தி சுஹைனா மற்றும் உறவினர்களுடன் சென்ற போது நிஹார் பாத்திமாவிற்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்த்தார். முதல் வாதி தன்மகளை சிகிச்சைக்குச் சேர்த்த விவரத்தை மூன்றாம் பிரதிவாதிக்குத் தகவல் தெரிவித்த போது மூன்றாம் பிரதிவாதி வந்து பார்க்கவில்லை. இந்நிலையில் நிஹார் பாத்திமா சிகிச்சை பலன் அளிக்காமல் 16.06.2021 அன்று அதிகாலை 4:20 மணிக்கு இறந்துவிட்டார்.

2.11. அதன்பிறகு மூன்றாம் பிரதிவாதிக்கு இறந்த தகவல் கொடுக்கப்பட்டு, மூன்றாம் பிரதிவாதியும் வந்து சென்றுள்ளார். தனது மகள் இறந்ததால் முதல் வாதி மிகவும் மனம் உடைந்த நிலையில் உறவினர்கள் முன்பாக

அவரது மகளுக்கு செய்த தங்க நகைகளை மூன்றாம் பிரதிவாதியிடம் இருந்து மீட்டுக் கொடுக்க வேண்டும் என்றும், தான் ரொக்கமாகக் கொடுத்த ரூபாய் 4 லட்சத்தையும் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது மூன்றாம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு உள்ளார்.

2.12. அப்போது முதல் வாதி தனது மகள் பெயரில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பாலிசி எடுத்த விவரத்தைத் தெரிவித்தார். மேலும், இரண்டாம் வாதி இளவராக இருப்பதால் அவரது பெயரை நாமினியாகப் போட்டு இருப்பதாகவும், அதற்குரிய கோரிக்கை படிவங்களில் மூன்றாம் பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுக்க வேண்டும் என்றும், அந்த பணத்தை இரண்டாம் வாதியின் எதிர்கால நலனுக்காக வைப்பீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். ஆரம்ப நிலையில் மூன்றாம் பிரதிவாதி ஒப்புக் கொண்டார். ஆனால், பின்னிட்டு கோரிக்கை படிவம் தர முடியாது என்று மறுத்துவிட்டார்.

2.13. முதல் வாதி காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு கொடுத்தார். ஆனால், மூன்றாம் பிரதிவாதி விசாரணைகளுக்கு முன்னிலையாகாமல் தப்பித்துக் கொண்டு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாலிசி எண்ணைக் கண்டுபிடித்து ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் உள்ள தொகையை சட்டவிரோதமாகப் பெறுவதற்கு முயற்சி மேற்கொண்டு உள்ளார்.

2.14. அசல் பாலிசி பத்திரம் முதல் வாதி வசம் உள்ளபடியால் மூன்றாம் பிரதிவாதிக்கு கடந்த 12.10.2021 அன்று அந்த சங்கதிகளைத் தெரிவித்து முதல் வாதி தன் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பானது மூன்றாம்

பிரதிவாதி குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருப்பு இல்லை என்ற காரணம் காட்டப்பட்டு திருப்பப்பட்டு இருக்கிறது.

2.15. மூன்றாம் பிரதிவாதி கடந்த 16.08.2021 அன்று தவறான காரணங்களைக் குறிப்பிட்டு உண்மைக்குப் புறம்பான சங்கதிகளைத் தெரிவித்து சட்டவிரோதமாக இறந்து போன நிஹார் பாத்திமா பெயரில் உள்ள ஆயுள் காப்பீட்டுக் கழக பணத்தைப் பெறும் நோக்கத்துடன் திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் தவறான காரணங்களைத் தெரிவித்து அசல் மனு எண். 87/2021 என ஒரு வழக்கினையும் தாக்கல் செய்து இருக்கிறார்.

2.16. அந்த வழக்கில் தன்னுடைய முகவரியை சரிவர தெரிவிக்காமல், நிரந்தர வசிப்பிடத்தைத் தெரிவிக்காமல், முதல் வாதியை அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு நீதிமன்றத்தில் உண்மைச் சங்கதிகளை மறைத்து தவறான உத்தரவு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த மனுவைத் தாக்கல் செய்து இருக்கிறார்.

2.17. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இருந்து வழங்கப்பட்ட அசல் பாலிசி பத்திரமானது முதல் வாதி வசம் இருப்பதை நன்கு தெரிந்து கொண்டு, அதனை மறைத்து தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு இணையதளம் மூலமாக ஒரு புகார் அனுப்பி அசல் பாலிசி பத்திரம் தொலைந்துவிட்டதாக தவறான தகவல் தெரிவித்து அதன் மூலம் இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாம் பிரதிவாதியிடமிருந்து ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இருந்து பணத்தைப் பெற்றுவிடலாம் என்று மோசடியாக செயல்பட்டு வருகிறார்.

2.18. மேலும் போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இருந்து பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். எனவே, இறந்துபோன நிஹார் பாத்திமா பெயரில் உள்ள பாலிசித் தொகையை முதல் பிரதிவாதி ஆகிய ஆயுள் காப்பீட்டுக் கழகம் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிட வேண்டும் என்றும், இரண்டாம் வாதி உரிமை வயது அடையும் வரை வைப்பீட்டில் இருக்க வேண்டும் என்றும், இரண்டாம் வாதியின் கல்வி மற்றும் மருத்துவச் செலவுகளுக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும், பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

3. **இரண்டாம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு முதல் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**

3.1. இந்த வழக்கின் முதல் வாதி தனது மகளாகிய நிஹார் பாத்திமாவின் பெயரில் முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாம் பிரதிவாதி ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பாலிசி எடுத்திருந்தார்.

3.2. மேலும், அந்த பிரீமியம் தொகை ரூ.1,17,816/– செலுத்தினார். மேற்படி நிஹார் பாத்திமா கடந்த 16.06.2021 அன்று இறந்து விட்டார். ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட படிவத்தின் படி மூன்றாம் பிரதிவாதி நாமினியாக காண்பிக்கப்பட்டு இருக்கிறார்.

3.3. இன்சூரன்ஸ் சட்டம் பிரிவு 39 இன் படி நாமினியாக நியமனம் செய்யப்பட்டவருக்கு இறப்புக்கோரிக்கை தொகை வழங்கப்பட வேண்டும். வாதிகள் அசல் வழக்கைத் தாக்கல் செய்திருப்பதால் காப்பீட்டு கோருரிமை பணம் வழங்கப்படவில்லை. முறையான கோருரிமை மனு எதுவும் வழங்கப்படவில்லை.

இந்நீதிமன்றம் யாருக்கு கோருரிமைப் பணத்தை வழங்க வேண்டும் என்று உத்தரவிடும் பட்சத்தில் அதனை முறையான ஆவணங்களுடன் சமர்ப்பித்தால் முதல் பிரதிவாதியும் இரண்டாம் பிரதிவாதியும் அதனை பரிசீலித்து தொகையை வழங்குவதற்கு தயாராக இருக்கிறார்கள்.

4. **<u>மூன்றாம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

4.1. தாவா வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கது இல்லை.

4.2. தாவா வழக்கில் சொல்லப்பட்டிருக்கும் சங்கதிகளில் இந்த 3ம் பிரதிவாதி நேரடியாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவையாவும் பொய்யானவை. அதனை இந்த முதல் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

4.3. தாவா வழக்கின் வழக்குரையில் முதல் வாதி கூறியிருப்பதுபோல், வாதியின் மகளுடன் இந்த 3ம் பிரதிவாதி நல்ல முறையில் இணக்கமாக குடும்பம் நடத்தாமல், பணம் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு, திருமணத்தின் போது வழங்கப்பட்ட நகைகள் அனைத்தையும் அடகு வைத்து விட்டார்கள் என்பதும், முதல் வாதியிடம் ரூ.4.00 லட்சம் வரை பணம் பெற்று தொழில் நடத்துவதாகக் கூறி நஷ்டம் ஏற்படுத்தி வந்தார் என்பதும், 1ம் பிரதிவாதி வழங்கிய அறிவுரையை ஏற்காமல் தொடர்ந்து அவரது மனைவியிடம் பணம் கேட்டு மனஉளைச்சல் ஏற்படுத்தியதாகவும், 3ம் பிரதிவாதியின் மனைவிக்குச் சொந்தமான நகைகளை அடமானம் வைத்ததை திருப்பித்தரக் கோரி 05.11.2016ம் தேதியில் நிஹார்பாத்திமா திருச்சி கன்டோன்ட்மெண்ட் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் விசாரணையில் நகைகளை ஒரு வருடத்திற்குள் திருப்பிக் கொடுப்பதாகக் கூறியதால், சமரசம் செய்து

மனு நடவடிக்கை கைவிடப்பட்டது என்பதும், நாளது தேதி வரை அடகு நகைகளை மீட்டுத்தரவில்லை என்பதும், முதல் வாதியின் மகள் நிஹார்பாத்திமா மற்றும் இரண்டாம் வாதி சுஹைனாவை அழைத்துச் செல்லாமல் அதற்கான முயற்சி செய்யாமல், 3ம் பிரதிவாதி காலம் கடத்தி வந்தார் என்பதும், முதல் வாதி மேற்படியார்களை பராமரித்து வந்தார் என்பதும், LIC Policy தொகை ரூ.1,17,816/– 1ம் வாதியால் செலுத்தப்பட்டது என்பதும், மைனர் 2ம் வாதியை நாமினியாகப் போடமுடியாது என்பதால், தவறுதலாக 3ம் பிரதிவாதியை நாமினியாகப் போட்டுள்ளனர் என்பதும், மேற்படி LIC Policy க்கும், 3ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்பதும், 3ம் பிரதிவாதியின் மனைவி உடல்நிலை சரியில்லாமல் போன சமயத்தில், தகவல் தெரிவித்தும், 3ம் பிரதிவாதி வந்து பார்க்கவில்லை என்பதும், பின்னர் அவரது மனைவி இறந்த பின்னர் தகவல் தெரிந்து வந்து சென்றார் என்பதும், அந்த சமயத்தில், முதல் வாதி அவரது மகளுக்குக் கொடுத்த நகைகளையும், ரொக்கமாகக் கொடுத்த ரூ.4.00 லட்சம் பணத்தையும், திரும்பச் செலுத்தும்படி கேட்டதையும், LIC–ல் 3ம் பிரதிவாதி நாமினியாக நியமிக்கப்பட்ட தொகையை 2ம் வாதி பெயருக்கு டெபாசிட் செய்ய வேண்டுமென முதல் வாதி கேட்டுக் கொண்டதை 3ம் பிரதிவாதி ஒப்புக் கொண்டார் என்பதும், LIC தொகையை 3ம் பிரதிவாதி சட்டவிரோதமாகப் பெற முயற்சி மேற்கொண்டார் என்பதும், LIC Policy தொகை பெறும் நோக்குடன் தவறான காரணங்களைக் கூறி 3ம் பிரதிவாதி ஸ்ரீவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில், G.W.O.P. No.87/2021 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும், குறுக்கு வழியில் LIC Policy தொகையை அடைய முயற்சித்து வருகிறார் என்பதும், மேற்படி தொகையில் 3ம்

பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதும், LIC ஏஜெண்ட் தவறுதலாக 3ம் பிரதிவாதியை நாமினியாகப் போட்டு, பாலிசி வேலையை முடித்துள்ளார் என்பதும், எனவே முதல் பிரதிவாதியை இறந்துபோன நிஹார்பாத்திமா பெயரில் உள்ள பாலிஸி தொகையை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய உத்தரவிடக் கோரியும், மேற்படி தொகையை 2ம் வாதி மேஜராகும் வரை வைப்பீடு செய்ய உத்தரவிடக் கோரியும், அதில் இருந்து வரும் வட்டித் தொகையை 2ம் வாதியின் கல்வி மற்றும் மருத்துவச் செலவிற்கு முதல் வாதி எடுத்துக் கொள்ள அனுமதி கோரியும் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகக் கூறியிருப்பது பொய்யென மறுக்கப்படுகிறது. அதனை முதல் வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

4.4. உண்மையில், இந்த முதல் வாதி தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. முழுக்க முழுக்க பொய்யான சங்கதிகளைச் சொல்லி, உண்மையானச் சங்கதிகளை மறைத்து வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார். இந்த முதல் வாதியின் மகளும், 3ம் பிரதிவாதியின் மனைவியுமான நிஹார்பாத்திமா மரணம் அடையும் காலம் வரை இந்த 3ம் பிரதிவாதியும், அவரது மனைவியும் நல்ல முறையில் மகிழ்ச்சியாக இல்லறம் நடத்தி வந்துள்ளனர். மேற்படியார்களுக்கு இடையே எவ்வித கருத்து வேறுபாடும் இருந்ததில்லை. இந்த 3ம் பிரதிவாதிக்கும், அவரது மனைவிக்கும், 08.11.2012ம் தேதியில் திருமணம் நடைபெற்ற நாள் முதல் 2016ம் ஆண்டு வரை 3ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் மேற்படியார்களின் மகளான இந்த 2ம் வாதியுடன் காஞ்சிபுரத்தில் உள்ள 3ம் பிரதிவாதியின் பெற்றோருடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். அங்கு இந்த 2ம் வாதி பள்ளிப்படிப்பு பயின்று வந்துள்ளார். அந்த சமயத்தில் இந்த முதல் வாதி தனது

இருதய நோய்க்கு சிகிச்சை பெற்று வந்ததன் காரணமாகவும், அவரது 2 வது மகள் கல்லூரி படிப்பு முதல் வாதியின் மனைவி மற்றும் அவரது வீட்டைப் பராமரிப்பு செய்வதற்காக 3ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் குழந்தையை தங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளார். முதல் வாதியின் ஆதரவற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, பரந்த மனப்பான்மையுடன் தனது மனைவி மற்றும் குழந்தையை திருச்சியில் உள்ள முதல் வாதியின் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார். அவ்வாறு அனுப்பி வைத்த சமயத்திலும், இந்த 3ம் வாதி அடிக்கடி திருச்சிக்குச் சென்று மனைவி மற்றும் குழந்தைகளுடன் தங்கியிருப்பதையும், மேற்படியார்களின் பராமரிப்பு செலவிற்கு பணம் கொடுத்து உதவுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்துள்ள நிலையில், அதற்கு மாறாக ஏதோ, இந்த 3ம் பிரதிவாதி பல்வேறு தொழில் செய்து நஷ்டம் அடைந்துள்ளதாகவும், அதற்கு அவரது மனைவியின் நகைகளை அடமானம் வைத்ததாகவும், முதல் வாதியிடம் ரூ.4.00 லட்சம் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி நகைகளை திருப்பிக் கொடுப்பதாகக் கூறியதால், திருச்சி காவல் நிலையத்தில் 05.11.2016 3ம் பிரதிவாதியின் மனைவி கொடுத்த புகார் மனு சமரசம் செய்து முடிக்கப்பட்டது என்பதும் பொய்யென மறுக்கப்படுகிறது.

4.5. உண்மையில், இந்த 3ம் பிரதிவாதி மீது 05.11.2016ம் தேதியில் புகார் மனு எதுவும் கொடுக்கப்படவில்லை. அதன் மீது விசாரணை எதுவும் நடைபெறவில்லை. அது சமரசமாக முடிக்கப்படவும் இல்லை. மேற்படி சம்பவம் முதல் வாதியின் கற்பனையில் தோன்றியதாகும். உண்மையில், அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டிருந்தால், இந்த முதல் வாதி தரப்பில் மேற்படி புகார் மனு மற்றும் காவல்துறையில் வழங்கப்பட்ட மனு ரசீது நகல் சமரசம் செய்யப்பட்டதற்கான குறிப்பு,

நகைகள் அடகு வைத்ததற்கான ஆதாரம் ஆகியவை வழங்கப்பட்டிருக்கும். மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாததிலிருந்தே முதல் வாதியின் கூற்று பொய்யானது ஆகும். உண்மையில், 3ம் பிரதிவாதியின் மனைவிக்கு திருமணத்தின் போது வழங்கப்பட்ட 75 பவுன் தங்க நகைகள் மற்றும் 3ம் பிரதிவாதியால் அவரது மனைவிக்கு திருமணத்தின் போது வழங்கப்பட்ட 5 பவுன் தங்க நகைகள் 2ம் வாதிக்கு அவர் பிறந்த சமயத்தில் அணிவிக்கப்பட்ட சுமார் 3 பவுன் எடையுள்ள தங்க அரைஞாண் மற்றும் இரண்டு தங்க வளையல்கள் மற்றும் 3ம் பிரதிவாதியின் மனைவிக்கு 3ம் பிரதிவாதி வாங்கிக் கொடுத்த 5 பவுன் எடையுள்ள தங்க வளையல்கள் மற்றும் தங்க தோடுகள் உள்ளிட்ட மொத்தம் 98 பவுன் எடையுள்ள சுமார் ரூ.50.00 லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் இந்த முதல் வாதி வசம் உள்ளது. மேற்படி நகைகளை அபகரிக்கும் நோக்கில் இந்த முதல் வாதி செயல்பட்டு வருகிறார்.

4.6. அதேபோல், தாவா LIC Policy இந்த 3ம் பிரதிவாதியால் அவருக்கு சொந்தமான தொகையைக் கொண்டு போடப்பட்டதாகும். அதற்கு மாறாக ஏதோ, இந்த வாதி மேற்படி பாலிஸிக்கான தொகையைச் செலுத்தினார் என்பது பொய்யான தகவல் ஆகும். மேற்படி பிரதிவாதியின் மனைவி பெயருக்குப் போடப்பட்டதாகும். அதற்கான படிவத்தை 3ம் பிரதிவாதியின் மனைவியே பூர்த்தி செய்துள்ளார். அவர் கொடுத்த தகவலின் பேரில் LIC ஏஜெண்ட் அவரது கணவரான 3ம் பிரதிவாதியை நாமினியாக நியமனம் செய்துள்ளார். அது முழுவதும் சட்டப்பூர்வமானதாகும். அதில் எவ்வித தவறும் இல்லை. 2ம் வாதியின் தகப்பனாரும், இயற்கை பாதுகாவலருமான 3ம் பிரதிவாதி வசம் மைனர் 2ம் வாதியை ஒப்படைத்தால், இந்த 3ம் பிரதிவாதியின்

மனைவிக்கு அவரது திருமணத்தின்போது அணிவிக்கப்பட்ட தங்க நகைகள் 75 பவுன் மற்றும் 3ம் பிரதிவாதி தரப்பில் அவரது மனைவிக்கு வழங்கப்பட்ட 13 பவுன் தங்க நகைகள் மற்றும் LIC Claim தொகை ஆகிய அனைத்தையும் 3ம் பிரதிவாதியின் வசம் வழங்கவேண்டி வரும் என்பதற்காக, அதனை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில், 3ம் பிரதிவாதியின் வசம் அவரது மகளான 2ம் வாதியை ஒப்படைக்க மறுத்து வருகிறார். இது குறித்து விருதுநகர் மாவட்டம், தம்பிபட்டியில் வைத்து ஊர் பெரியவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பஞ்சாயத்திலும், ஸ்ரீவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நடைபெற்ற விசாரணையின்போதும், முதல் வாதி மைனர் 2ம் வாதியை ஒப்படைக்க மறுத்து விட்ட காரணத்தால், 3ம் பிரதிவாதி தனது வசம் அவரது மகளை ஒப்படைக்கும்படி கேட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில், GWOP No.87/2021 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதனை மறைத்து, தாவா வழக்கின் வழக்குரையில், பத்தி 6, 7, 8 ல் வாதி கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை ஆகும்.

4.7. 3ம் பிரதிவாதி அவரது மனைவியின் சட்டப்பூர்வ வாரிசு மற்றும் மேற்படி பாலிஸியின் நாமினி என்ற அடிப்படையில், மேற்படி LIC Claim தொகையை பெற உரிய சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இது குறித்து அவர் எவ்வித போர்ஜரி நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. மேற்படி தொகை 3ம் பிரதிவாதி மற்றும் அவரது மகளான இந்த 2ம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதாகும். அதனைப் பொறுத்து உரிமை மற்றும் பரிகாரம் கோர முதல் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை, தாவா பிரச்சனை சம்பந்தமாக முதல் வாதி தரப்பில் காவல் துறையில் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ள புகார் சம்பந்தமாக எவ்வித விசாரணையும்

3ம் பிரதிவாதி மீது நடைபெறவில்லை. அது குறித்து 1ம் பிரதிவாதி கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை.

4.8. தாவா வழக்கில் முதல் வாதி கூறியுள்ள வியாஜ்ஜிய மூலம் பொய்யானது அதன் அடிப்படையில் முதல் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்குக் கிடைக்கத்தக்கதில்லை.

4.9. இந்த 3ம் பிரதிவாதி இந்த 2ம் வாதியின் தந்தை மற்றும் இயற்கை பாதுகாவலராக உள்ள நிலையில், முதல் வாதி தன்னை 2ம் வாதியின் கார்டியன் மற்றும் பாதுகாவலர் என்று கூறி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை.

4.10. வாதிக்கு நிஹார்பாத்திமா பெயரில் உள்ள பாலிஸி தொகையின் நாமினியான 3ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் கோர எவ்வித உரிமையும் இல்லை. அதன் அடிப்படையில் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும்.

4.11. தாவா வழக்கு 3ம் பிரதிவாதிக்கு வீண் அலைக்கழிவும், மனஉளைச்சலும் ஏற்படுத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.12. தாவா வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக் கொண்டு இந்த எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படுகிறது.

5) **வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

1) வாதிகள் கேட்கும் பரிகாரம் அவருக்குக் கிடைக்க கூடியதாக இருக்கிறதா?

2) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள்?

6. வாதிகள் தரப்பில், முதல் வாதி திரு. அ. கலீல் அகமது வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.22 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. 1,2 பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 ஆக திரு. கோ. சுரேஷ் விசாரிக்கப்பட்டுள்ளார் மற்றும் மூன்றாம் பிரதிவாதி திரு.க.அன்சர் அலி பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

7. **எழுவினாக்கள் 1 மற்றும் 2 :–**

வாதிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தின் போது இந்த வழக்கில் கண்ட முதல் வாதியின் மகள் நிஹார் பாத்திமாவிற்கும், மூன்றாம் பிரதிவாதிக்கும் 08.11.2012 அன்று திருமணம் நடைபெற்றது என்றும், அந்த திருமணத்தின் பயனாக இரண்டாம் வாதி 14.02.2014 அன்று பிறந்திருக்கிறார் என்றும், மூன்றாம் பிரதிவாதி திருமணம் நடைபெற்ற காலத்தில் இருந்து எந்த வேலைக்கும் செல்லாமல், நல்ல முறையில் குடும்பம் நடத்தாமல், பணம் பறிப்பதையே நோக்கமாக வைத்திருந்து முதல் வாதி தன் மகளுக்கு திருமணத்தின் போது சீதனமாகக் கொடுத்த நகைகள் அனைத்தையும் அடகு வைத்து, தொடர்ந்து பணம் கேட்டு தொந்தரவு செய்து வந்த காரணத்தினால் திருச்சி கன்டோன்மென்ட் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றும், முதல் வாதி தனது மகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு,

இரண்டாம் வாதியின் நலனையும் கருத்தில் கொண்டு தன்னுடைய சேமிப்புக் கணக்கிலிருந்து ரூ.1,17,816/– முதல் பிரதிவாதி அலுவலகத்தில் செலுத்தி இருக்கிறார் என்றும், ஆனால், ஆயுள் காப்பீட்டுக் கழக அலுவலகத்தில் தவறுதலாக மூன்றாம் பிரதிவாதியை நாமினியாக நியமனம் செய்து விட்டார்கள் என்றும், நிஹார் பாத்திமாவிற்கு திடீர் உடல்நல குறைவு ஏற்பட்டு 16.06.2021 அன்று இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் அசல் பாலிசி பத்திரம் முதல் வாதியின் கைவசம் இருப்பதை மறைத்து மூன்றாம் பிரதிவாதி சட்ட விரோதமாகத் தொகையை பெற முயற்சி செய்து வருவதால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், வாதிகள் கேட்கக்கூடிய பரிகாரங்கள் அவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது என்றும், எனவே பிராதுப்படி தீர்ப்பு பிறப்பிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

8. இந்த வழக்கில் முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாம் பிரதிவாதி தரப்பில் முன்னிலையாகிய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் அறிவார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தின் போது பாலிசி பத்திரத்தில் நாமினியாக மூன்றாம் பிரதிவாதியை காட்டப்பட்டு இருந்தாலும், தற்போது தரப்பினர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு இருக்கும் காரணத்தினால் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் செயல்படுவதற்கு தயாராக இருக்கிறது என்று வாதிட்டார்.

9. மூன்றாம் பிரதிவாதி தரப்பில் முன்னிலையாகிய அறிவார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தின் போது ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு மூன்றாம் பிரதிவாதியால் அவருக்குச் சொந்தமான தொகையைக் கொண்டு பாலிசி எடுக்கப்பட்டது என்றும், அதற்கு மாறாக முதல் வாதி பாலிசிக்கான தொகை செலுத்தியதாகக் கூறியிருப்பது பொய்யான தகவல் என்றும், இன்சூரன்ஸ் சட்டம்

பிரிவு 39 இன் படி காப்பீட்டாளர் பாலிசிதாரரை நியமனம் செய்து இருப்பதால் அதற்கு மாறாக தற்போது முதல் வாதி கோரிக்கை எழுப்ப இயலாது என்று வாதிட்டார்.

10. மேலும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் தொகை கேட்டு முதல் வாதி கோரிக்கை மனு எதுவும் வழங்காத நிலையில் மூன்றாம் பிரதிவாதி வசம் பணத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

11. வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கல் பிராது பரிகாரமாக கீழ்க்கண்டவாறு கோரப்பட்டு இருக்கிறது.

"அ ) முதல் பிரதிவாதியை இறந்து போன நிஹார் பாத்திமா பெயரில் உள்ள பாலிசிக்கு உரிய கிளைம் தொகையான ரூபாய் 15 லட்சத்தை இந்த வழக்கு தாக்கல் செய்த தேதியில் இருந்து வருடத்திற்கு 12% நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய உத்தரவிட கோரியும்.

ஆ) முதல் பிரதிவாதி நீதிமன்றத்தில் டெபாசிட் செய்யும் தொகையை, இரண்டாவது வாதி பெயரில் மேஜராகும் வரை வைப்பீடு செய்ய உத்தரவிட்டும் அதில் இருந்து வரும் வட்டி தொகை இரண்டாம் வாதியின் கல்வி மற்றும் மருத்துவ செலவிற்கு முதல் வாதி எடுத்துக் கொள்ள அனுமதி வழங்குமாறும்".

12. இந்த வழக்கில் கண்ட முதல் வாதியின் மகள் நிஹார் பாத்திமாவிற்கும், மூன்றாம் பிரதிவாதி அன்சர் அலிக்கும் 08.11.2012 அன்று திருமணம் நடைபெற்றது என்பதும், அந்த திருமணத்தின் பலனாக 14.02.2014 அன்று இரண்டாம் வாதி பிறந்திருக்கிறார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

13. இரண்டாம் வாதியின் தாயாராகிய நிஹார் பாத்திமா கடந்த 16.06.2021 அன்று காலமாகிவிட்டார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. முதல் வாதி தரப்பில் திருமணம் நடைபெற்ற காலத்தில் இருந்து மூன்றாம் பிரதிவாதி தன் மகளிடம் நகைகள் அனைத்தையும் பெற்று அடகு வைத்து ரூபாய் 4 லட்சம் வரை செலவு செய்து நஷ்டம் ஏற்படுத்தியும் தொடர்ந்து பணம் கேட்டு மன உளைச்சலையும், தொந்தரவையும், ஏற்படுத்தி வந்த காரணத்தினால் தன்னுடைய மகளின் பேத்தியாகிய இரண்டாம் வாதியை தான் ஒரு பள்ளியில் சேர்த்து மூன்றாம் பிரதிவாதி செய்ய வேண்டிய கடமைகளைத் தான் செய்து வந்ததாகக் கூறியிருக்கிறார்.

14. வாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு பக்கம் "நான்கு" பத்தி "ஆறில்" முதல் வாதி தனது மகளின் எதிர்கால நலனுக்காகவும், இரண்டாம் வாதியும் தன்னுடைய பேத்தியுமான சுஹைனாவின் எதிர்கால நலனை முன்னிட்டு தன்னுடைய சேமிப்புக் கணக்கிலிருந்து ரூ.1,17,816/- முதல் பிரதிவாதி அலுவலகத்தில் செலுத்தியதாகக் கூறி இருக்கிறார்.

15. இந்த வழக்கில் இரண்டாம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு முதல் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை பத்தி மூன்றில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டு இருக்கிறது.

> “It is true that the 1st plaintiff has made a policy no. 305487324 and taken the policy, in the name of his daughter and has paid a sum of Rs.1,17,816/- towards premium. The Nominee in the policy is K. Ansar Ali 3rd defendant. The policy is taken in the name of Nihar Fathima(daughter)”.

மேலே கண்ட இரண்டாம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை சங்கதிகளிலிருந்து முதல் வாதியால் அவரது மகளாகிய நிஹார் பாத்திமாவின் பெயருக்கு பாலிசி எடுக்கப்பட்டது என்பது அந்த பாலிசி தொகை ரூ.1,17,816/– முதல் வாதியால் செலுத்தப்பட்டது என்பதையும் ஒப்புக்கொண்டு இருப்பது தெரியவருகிறது.

16. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.3 ஆக முதல் வாதியின் வங்கிக் கணக்கு விவரப் பட்டியல் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. அதில் 18.03.2020 அன்றும் 23.03.2020 அன்றும் ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது.

| Date | Particulars | Chq. No. | Withdrawals | Deposits | Balance |
|---|---|---|---|---|---|
| 18.03.2020 | LIC OF INDIA Bo | 190146 | 1,64,366.00 | – | 55,27,126.11Cr |
| 23.03.2020 | LIC OF INDIA BO | 190148 | 1,23,118.00 | – | 53,04,008.11 Cr |

17. முதல் வாதியால் பணம் செலுத்தப்பட்ட தேதியான 18.03.2020 அன்று காசோலை எண்.190148 என குறிப்பிட்டு வா.சாஆ.4 முதல் பீரிமியம் ரசீது தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. வா.சா.ஆ. 6 ஆக முதல் பிரதிவாதி ஆகிய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து இறந்து போன நிஹார் பாத்திமா பெயரில் வழங்கிய ஆயுள் காப்பீட்டுக் கழக பாலிசி தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. வா.சா.ஆ. 7 ஆக இரண்டாவது வாதி திருச்சிராப்பள்ளியில் உள்ள கேம்பியன் பள்ளியில் படித்து வருவதைக் காட்டக்கூடிய அடையாள அட்டை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. வா.சா.ஆ.12 ஆக முதல் வாதியால் காவல்துறை இயக்குனர் அவர்களுக்கும், திருச்சி மாநகர காவல் ஆணையர் அவர்களுக்கும், தேனி மாவட்ட காவல்துறை

கண்காணிப்பாளருக்கும், கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகல் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

18. இதன் மூலம் முதல் வாதியின் மகள் இறந்த பிறகு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் உள்ள பணத்தை எடுப்பதற்காக இரண்டாவது வாதியை தன் வசம் ஒப்படைக்கக் வேண்டும் என்று மூன்றாம் பிரதிவாதி அச்சுறுத்தி வருவதாக குறிப்பிட்டு இருப்பது தெரிய வருகிறது.

19. வா.சா.ஆ. 13 ஆக திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் மூன்றாம் பிரதிவாதி மனுதாரராக இருந்து, இரண்டாம் வாதியை தன் வசம் ஒப்படைக்க கேட்டு தாக்கல் செய்த மனு நகல் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

வா.சா.ஆ. 14. ஆக முதல் வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்யப்பட்டு இருக்கறிது.

20. இந்த வழக்கில் மூன்றாம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை பக்கம் "ஆறு" பத்தி "ஆறில்" தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுள் காப்பீட்டுக் கழக பாலிசி தொகை மூன்றாம் பிரதிவாதியால் அவருக்குச் சொந்தமான தொகையை கொண்டு போடப்பட்டது என்றும், முதல் வாதி செலுத்தியதாகக் கூறியது பொய்யான தகவல் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டு இருக்கிறது.

21. மூன்றாம் பிரதிவாதி தரப்பில் அவரது மனைவியாகிய நிஹார் பாத்திமா பெயரில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு பாலிசி தொகை செலுத்தப்பட்டதாகக் கூறும் சங்கதிகளுக்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

22. மூன்றாம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட போது தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்து இருக்கிறார்.

"இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஆயுள் காப்பீட்டுக் கழக பாலிசி எந்த தேதியில் போடப்பட்டது என்று தெரியாது".

"எனது மகள் எல்கேஜி முதல் தற்போது வரை திருச்சியில் தான் படித்துக் கொண்டு இருக்கிறார். அவர் வாதியின் வீட்டில் இருந்து தான் படித்து வருகிறார். எனது மகள் படிப்புச் செலவுக்காக நான் பணம் அனுப்பி வைத்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதாவது வழக்கில் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை".

" பாலிசி தொகையை வாதி தனது வருமானத்தில் இருந்து வங்கிக் கணக்கு மூலமாக செலுத்தினார் என்றால் சரிதான்".

" அசல் எல்ஐசி பத்திரம் அனைத்தையும் முதல் வாதி வசம் கொடுத்து வைத்திருந்தேன்".

மேலே கண்ட சாட்சியத்தில் இருந்து 3ம் பிரதிவாதியால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு பாலிசி தொகை செலுத்தியதற்கு ஆவணங்கள் எதுவும்இல்லை என்பதும், அதே வேளையில் இந்த வழக்கின் முதல் வாதியால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு பாலிசி தொகை செலுத்தப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் இருப்பது தெரிய வருகிறது.

23. மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கீழ்க்கண்ட தீர்முடிவில் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**J. GANAPATHA AND OTHERS … APPELLANT(S)**
**VERSUS**

**M/S. N. SELVARAJALOU CHETTY TRUST REP. BY ITS TRUSTEES AND OTHERS … RESPONDENT(S)**
**2025 INSC 395**

*20. The concept of moulding of relief refers to the ability of a court to modify or shape a relief sought by a party in a legal proceeding based on the circumstances of the case and the facts established after a full-fledged trial. The principle enables the court to grant appropriate remedies even if the relief requested in the pleading is not exact or could not be considered by the court or changed circumstances have rendered the relief obsolete. The court aims that justice is served while taking into account the evolving nature of a case. The above road map is pursued by a court based on the notion of flexibility in relief, equitable jurisdiction, and is tempered by judicial discretion. When moulding the relief, the court considers the issues and circumstances established during the full-fledged trial, looks at shortening the litigation, and then in its perspective, renders complete justice to the issue at hand. The converse of the above is that the moulded relief should not take the aggrieved party by surprise or cause prejudice. The relief is moulded as an exception and not as a matter of course.*

மேலே கண்ட தீர் முடிவு வழக்கின் தன்மைக்கு பொருந்த கூடியவையாக இருக்கிறது.

24. இந்த வழக்கின் வாதிகள் பிராது பரிகாரமாக இறந்துபோன நிஹார்பாத்திமா பெயரில் உள்ள ஆயுள் காப்பீட்டுக்கழகத் தொகை ரூ.15,00,000/—ஐ வருடத்திற்கு 12 சதவிகித வட்டியுடன் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யக் கோரியிருந்தாலும், முதல் வாதி இறந்துபோன நிஹார்பாத்திமாவின் தகப்பனார் என்ற முறையிலும், இரண்டாம் வாதி நிஹார்பாத்திமாவின் மகள் என்ற முறையிலும், அவர்களுக்கு உரிய தொகை மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்த வழக்கின் மூன்றாம் பிரதிவாதி நிஹார்பாத்திமாவின் கணவர்

என்ற முறையில் முகமதிய சட்டத்தின்படி நான்கில் ஒரு பங்கு மட்டுமே அவருக்கு கிடைக்கத்தக்கது ஆகும். நிஹார் பாத்திமாவிற்கு வேறு ஆண் வாரிசுகள் இல்லாத காரணத்தினால் எஞ்சிய பங்கு முழுமையாக வாதிகளைச் சென்றடையக் கூடியதாக இருக்கிறது.

**25.** எனவே, மேலே கண்ட காரணங்களினாலும், மாண்புமிகு உச்சநீதிமன்றத் தீர்முடிவின் அடிப்படையில் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு வாதிகளுக்கு அவர்கள் கோரும் பரிகாரம் பகுதியாக கிடைக்கத்தக்காக இருக்கிறது என இவ்வெழுவினாக்களுக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

**முடிவில், வாதிகளின் வழக்கு பகுதியாக அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இறந்துபோன நிஹார்பாத்திமா பெயரில் உள்ள பாலிசித் தொகையில் வாதிகளுக்கு உரிய பங்குத்தொகையை 2ம் வாதியின் பெயரில் வாதிகளின் சம்மதத்தைப் பெற்று 1,2 பிரதிவாதிகள் ஆகிய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், இரண்டாம் வாதி உரிமை வயது அடையும்போது அவருக்குரிய பங்குத்தொகையை 1,2 பிரதிவாதிகள் வழங்கவேண்டுமென்றும், தீர்ப்பளிக்கப்படுகிறது. 2ம் வாதியின் கல்வி மற்றும் மருத்துவச் செலவிற்கு வட்டித்தொகையை 1,2 பிரதிவாதிகள் வழங்கிட உத்தரவிடப்படுகிறது. வழக்கின் செலவுத்தொகையை மூன்றாம் பிரதிவாதி செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

இந்தத் தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை திருத்தி, இன்று 2025ம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P Swaminathan Digitally signed by P Swaminathan

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :–</u>**

| | | |
|---|---|---|
| 1. | வா.சா.1. | திரு. அ. கலீல் அகமது |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1. | – | முதல் பிரதிவாதியின் ஆதார் அட்டை | நகல் |
| வா.சா.ஆ.2 | – | 2ம் வாதியின் ஆதார் அட்டை | நகல் |
| வா.சா.ஆ.3 | – | முதல் வாதி இந்தியன் ஒவர்சிஸ் வங்கியில் வைத்துள்ள சேமிப்பு கணக்கில் கணக்கு விவரப் பட்டியல். | உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | 20.03.2020 22.03.2021 | முதல் பிரதிவாதி நிறுவனம் வழங்கிய பாலிசி ரசீதுகள். | அசல் |
| வா.சா.ஆ.5 | 10.09.2020 | முதல் பிரதிவாதி நிறுவனம் வழங்கிய பாலிசி. | நகல் |
| வா.சா.ஆ.6 | 28.06.2021 | முதல் வாதியின் மகள் நிஹார் பாத்திமாவின் இறப்பு சான்றிதழ். | நகல் |
| வா.சா.ஆ.7 | –– | இரண்டாவது வாதியின் பள்ளி அடையாள அட்டை | நகல் |
| வா.சா.ஆ.8 | 13.2.2014 | இரண்டாவது வாதியின் பிறப்புசான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.9 | 16.06.2021 | முதல் வாதியின் மகளின் சிகிச்சை ஆவணம்.(Death Summary) | அசல் |
| வா.சா.ஆ.10 | 15.06.2021 | வாதியின் மகளின் ஸ்கேன் ரிப்போர்ட் ஆவணம். | அசல் |
| வா.சா.ஆ.11 | 15.06.2021 | வாதியின் மகள் விருதுநகர் மாவட்டம் செங்குன்றாபுரம் ஆரம்ப சுகாதர நிலையத்தில் சிகிச்சை எடுத்ததை காட்டக்கூடிய ஆவணம். | நகல் |
| வா.சா.ஆ.12 | 01.07.2021 | முதல் வாதி காவல் துறை இயக்குநர். சென்னை, காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்டம் மற்றும் காவல் ஆணையர் திருச்சி மாநகரம் ஆகியோர்களுக்கு அனுப்பிய பதிவு தபால் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டைகள். | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.13 | – | திருவில்லிபுத்தூர் குடும்பநல நீதிமன்றத்தில் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | 3 ம்பிரதிவாதி தாக்கல் செய்த அசல்மனு 87/2021. | |
| வா.சா.ஆ.14 | 12.10.2021 | முதல் வாதி தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு. | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.15 | – | 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. | அசல் |
| வா.சா.ஆ.16 | –– | 3 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்து திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை. | அசல் |
| வா.சா.ஆ.17 | 22.11.2021 | 3 ம் பிரதிவாதி பாலிசி காணவில்லை என கொடுத்த ஆன்லைன் புகார் மனு. | நகல் |
| வா.சா.ஆ.18 | 12.10.2021 | முதல் வாதி தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு. | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.19 | –– | முதல் பிரதிவாதி அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. | அசல் |
| வா.சா.ஆ.20 | 26.7.2023 | மேற்படி அறிவிப்பை 3 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்து திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உரை. | அசல் |
| வா.சா.ஆ.21 | 26.7.2023 | முதல் வாதி தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் தென்கரை காவல் ஆய்வாளருக்கும். 1,2 பிரதிவாதிகளுக்கும் அனுப்பிய மனு. | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.22 | 27.10.2022, 30.06.2023 | முதல் பிரதிவாதி அலுவலத்தில் இருந்து காலம் சென்ற நிஹார் பாத்திமாவுக்கு பணம்செலுத்த கேட்டு அனுப்பிய அறிவிப்பு கடிதம் | அசல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :–</u>

| | |
|---|---|
| பி.சா.1. | திரு. கோ. சுரேஷ் |
| பி.சா.2. | திரு. க. அன்சர் அலி |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 30.11.2017 | மூன்றாம் பிரதிவாதியின் சகோதரர் முகமது அலி திருமண அழைப்பிதழ். | அசல் |
| பி.சா.ஆ.2 | 30.11.2017 | அந்த திருமணத்தில் முதல் வாதி கலந்து கொண்டதை காட்டக்கூடிய புகைப்படம். | நகல் |

P Swaminathan Digitally signed by P Swaminathan

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.